
ஞாலகுருவின் படைப்புக்கள்

# தமிழுக்கு என்னென்ன செய்ய வேண்டும்? எப்படியெப்படிச் செய்ய வேண்டும்? எவ்வப்போது செய்ய வேண்டும்?



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,

12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,


**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)



மெய்யான இந்துமத ஆண்டு 43,73,122 வைகாசி மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

காணிக்கை: ரூ.10/-

# உள்ளுறை

1. **"தேவதேவி வருகை"** - 05/03/1987இல் விண்வெளியிலிருந்து தேவதேவி வருகை புரிந்ததை குருதேவர் அவர்கள் அறிவித்த ஓலையின் நகல்.
2. **"தமிழுக்கு என்னென்ன செய்ய வேண்டும்? எப்படியெப்படிச் செய்ய வேண்டும்? எவ்வப்போது செய்ய வேண்டும்?"** - குருதேவர் தமது ஏற்புச் செல்வனுக சித்தரடியான் திரு சி.கவிக்குமாரை அறிவித்து 06/03/1987இல் எழுதிய நெடிய கட்டுரை. அனைத்து அடியான்களிடமும் தாம் எதிர்பார்ப்பது என்ன என்பதை குருதேவரே விளக்கிக் கூறும் அஞ்சல்.
3. **"குருதேவரின் அருட்பயணம்"** - 08/03/1987இல் குருதேவர் அவர்கள் காரஞ்னேடைக் கருகுலத்தில் பூசைகள் செய்து விட்டு அருகே உள்ள எருமைவெட்டி பாளையம் எனும் ஊரில் உள்ள கோயில்களுக்குச் சென்ற பயணத்தினை விவரிக்கும் கட்டுரை.
4. **"பட்டாள வீரனுக்குப் பரிந்துரை மடல்"** - 17/04/1987இல் குருதேவர் அவர்கள் தமது சேலம் மாவட்ட அடியான் ஒருவருக்கு எழுதிய விரிவான அஞ்சல் வடிவக் கட்டுரை. தமிழுக்காகத் தன்னையே மாய்த்துக் கொள்ளவும் தயாராக இருக்கக் கூடிய அடியான்கள் செய்ய வேண்டுவது என்ன என விளக்கும் அஞ்சல்.
5. **"நலம் பாராட்டுத் திருவோலை"** - 05/05/1987இல் குருதேவர் அவர்கள் இந்து முன்னணியைச் சார்ந்த அடியான் ஒருவருக்கு எழுதிய சுருக்க விளக்க அஞ்சல்.
6. **"நாட்டின் இப்போதைய நிலை..."** - குருதேவர் அவர்கள் 1975இல் எழுதிய 'சிந்திக்கலாமா?' என்ற நூலில் காணப்படும் சில வரிகள் இன்றைக்கும், இன்னும் பல காலத்திற்கும் பொருந்துவதாகவே உள்ளன.
7. **"அதர்வான வேதம் காண்டம்: 1, மண்டலம்: 8, நாள்வாக்கிய மலர்கள்: 21 முதல் 48 வரை."**

ஓம்

# தேவதேவி வருகை

தலைமைப்பீடம்,
சென்னை-11,
05/03/1987.

பேரன்புடையீர்!

நேற்று 04/03/1987 புதன்கிழமை இரவு விண்வெளியில் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் குருதேவருக்கு உதவி செய்வதற்காக சத்தி அண்டத்திலிருந்து அனுப்பிய தேவி (அனாதி சத்தி, ஆதி சத்தி, அனாதி ஈசுவரி, ஆதி ஈசுவரி, ... என்ற நிலைகளில் உள்ளவள்) வந்ததை உணர்ந்தார் குருதேவர். இந்தத் தேவி வருகையிலே ஏராளமான எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்தமையால் இரத்தத்தில் குளித்த வண்ணம் மண்ணுக்கு வந்து காவிரியாற்றில் போய் குளித்து விட்டு குருதேவரைக் காண வந்தாள்.

அச்சமயத்தில் பூசையில் அமர்ந்து இருந்த முத்துராசமூர்த்தி, சீனிவாசன், பா.மோகன், த.குருசாமி, சீ.நாகானந்தன் ஆகியோரில் முத்துராசமூர்த்தி, சீனிவாசன் இருவர் மட்டும் வாழ்த்து பெற்றனர். மற்றவர்கள் முழுமையாகப் பக்குவம் பெறாததால் வாழ்த்துப் பெறவில்லை. அதன்பின்னர் இல்லத்தில் இருந்த மற்றவர்கள் வாழ்த்துப் பெற்றனர். குருதேவரைச் சந்தித்த பின்பு இந்த விண்வெளியில் இருந்து வந்த தேவி தஞ்சைக்குச் சென்று தாத்தா கோயில், மற்ற இடங்களைப் பார்க்கச் சென்றுள்ளாள். அப்படியே, நமது அ.வி.தி. யாகசாலைகள் அனைத்திற்கும் வருகை புரிவாள்.

எனவே, சிம்மவாகனத்தில் அமர்ந்து இருகைகளுடன், 18 வயதுடைய ஆனுல் 14 வயதுத் தோற்றப் பொலிவுடன் பால்வடியும் அழகிய முகத்துடன் சிறு பெண்ணுகக் காட்சியளிக்கக் கூடும். நம்மவர்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சியைப் பூசையில் அறிவித்து இந்த விண்வெளியிலிருந்து தாத்தாவால் அனுப்பப்பட்டுள்ள தேவியைப் பூசை செய்து யோக நிலையுடையவர்கள் அருள் பெறலாம்!

அனைவருக்கும் தெரிவியுங்கள்!

ஓலைநாயகம்:
**சுந்தரானந்தா.**

**//உண்மை நகல்//**

நகல் நல்குபவர்: அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், குருவின் பதிலி, சித்தரடியார் சீ.மணி, 10/3/87.

**// இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

பொன்னேரி,
06-03-87.

# தமிழுக்கு என்னென்ன செய்ய வேண்டும்? எப்படியெப்படிச் செய்ய வேண்டும்? எவ்வப்போது செய்ய வேண்டும்?

பேரார்வமிக்க எனது ஏற்புச் செல்வ! கவிக்குமரா!

1) நீ என் அருகிலேயே ஏறத்தாழ எல்லாப் பணிகளுக்கும் இணையில்லாத துணையாக இருந்து வருகிறாய். நான் எடுக்கின்ற முடிவுகளுக்கும், விடுக்கின்ற ஆணைகளுக்கும் உடனுக்குடன் முழுமையாக ஒப்புதலையும், ஒத்துழைப்பையும், செயல்மேல் செல்லுதலையும் வழங்கி வருகிறாய்.

உன்னைப் போல் அருளுலகில் நமது திருமந்திற ஓலை நாயகம் பரமாச்சாரியார் அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம், அ.வி.தி. தலைமைச் செயலாளர் நெ. சேவுகன் அவர்கள் செயல்பட்டு வருகிறார். அவருக்கு இணையாகப் பொருளுலகில் நமது இயக்க நிறுவன நிர்வாகங்களனைத்துக்கும் தலைமைப் பொறுப்பாளராக இருக்கும் அருள்மிகு அங்காளப் பரமேசுவரி சன்னிதானமாகிய நீ இருக்கின்றாய். இப்படி அருளுலகுக்கு ஒருவரும், பொருளுலகுக்கு ஒருவருமாக இருவர் எனக்குக் கிடைத்திருப்பது தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயல், அம்மையப்பன் துணை.

எனவேதான், நான் எனது தன்னிலை விளக்கமாக அடிக்கடி அஞ்சல் வடிவக் கட்டுரைகளை எழுதுகிறேன். என்னைப் பொறுத்தவரை பல்லாயிரக்கணக்கானவர்கள் எனக்குரியவர்களாகக் கிடைத்திருந்தாலும்; அதில் நூற்றுக்கணக்கானவர்கள் தேவையான தகுதிகளைப் (Necessary Qualifications)

பெற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்களை யெல்லாம் போதுமான அளவு தகுதியுள்ளவர்களாக (Sufficient Qualifications) மாற்றிடுவதற்காகத்தான் இலக்கியச் சுவைமிக்கக் கட்டுரைகளையும், நூல்களையும், கவிதைகளையும், குறிப்புக்களையும் எழுதிக் குவிப்பதோடு; கசப்பான கடுமையான கொடுமையான பயிற்சிகளையும், சோதனைகளையும், குட்டுக்களையும், தட்டுக்களையும், திட்டுக்களையும், தொட்டுக்களையும், சுட்டுக்களையும், இட்டுக்களையும், வெட்டுக்களையும் .... வழங்குகின்றேன் நான். இதனால், பண்படாமல் புண்பட்டு வருபவர்கள் ஏராளம். அதற்காக வருந்தினாலும் என்னைத் திருத்திக் கொள்ள முடியாதவனாக இருக்கிறேன்.

2) அடக்கமும், ஆர்வமும், பொறுப்பும், பொறுமையும் மிகுதியாக உடைய எமதருமை ஏற்புச் செல்வ! நீ எவ்வளவுதான் தடுத்தாலும், நான் எனக்கேற்படக் கூடிய வெற்றி தோல்விகளைப் பற்றி அவ்வப்போது வெளிப்படையாகவும், நேரடியாகவும், பச்சையாகவும், கொச்சையாகவும் இலக்கியமாக்கியே தீருவேன். அதுவும் அவசர அவசியமாகப் பல நகல்கள் எடுத்து நாடெங்குமுள்ள நமது இயக்க மையங்களுக்கும், முன்னணிச் செயல்வீரர்களுக்கும் அனுப்பியே தீருவேன். இப்படிச் செய்வதன் மூலம்தான் நான் தோல்விகளைக் கண்டு அஞ்சவில்லை, வெட்கப்படவில்லை, வேதனைப்படவில்லை, அழுது புலம்பி ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கவில்லை என்ற பேருண்மை அனைவருக்கும் தெரியும், புரியும்.

அதாவது ஒரு போரின் படைத் தளபதிக்கு அவன் உடம்பில் எத்தனைப் போர்க்களத் தழும்புகள் இருக்கின்றனவோ!?!; அவைதான் அவனுடைய போரின் அறிவையும், அநுபவத்தையும், வலிமையையும் விளக்கிடும். அதுபோலவே, பண்பாட்டுப் புரட்சிக்கு, அறிவுப் படைக்குத் தலைமை தாங்குகின்ற தளபதிக்கு எவ்வளவு தோல்விகள் (இழப்புக்கள், இழிவுகள், பழிகள், அழிகள், கறைகள், குறைகள், குற்றச் சாட்டுக்கள்) ஏற்பட்டு இருக்கின்றனவோ அவைதான் அவனுடைய வலிவையும், தெளிவையும், பொலிவையும், போரிடும்

<u>நுட்பத்தையும், திட்பத்தையும், ஒட்பத்தையும், கொள்கைப் பிடிப்பையும், குறிக்கோள் தெளிவையும், செயல் தந்திர வல்லமையையும் விளக்கிடும், விளக்கிடும், விளக்கிடும்</u>.

எனவேதான், அண்மையில் "*நாம் என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? எப்பொழுது செய்ய வேண்டும்?*" என்ற தலைப்பில் சுமார் 100 பக்க அளவில் நமது அ.வி.தி. செயலாளர் நெ. சேவுகனுக்கு எழுதிய நெடிய அஞ்சலில்,

நமது இயக்க வீரர்களுக்கிடையில்,

(அ) ஒற்றுமையில்லை;

(ஆ) பற்றில்லை;

(இ) பாசமில்லை;

(ஈ) கட்டுப்பாடில்லை;

(உ) தலைமைக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பண்பில் முழுமையில்லை;

(ஊ) தலைமையின் ஆணைகளை அப்படியே முழுமையாக ஏற்று உடனுக்குடன் நிறைவேற்றும் ஊக்கு இல்லை;

(எ) தலைவர் அண்மைக்காலத்தில் எழுதி வெளியிட்டுள்ள கையெழுத்துப் பிறதிகளையெல்லாம் ஆழமாகப் படித்து தேவையான அளவு அறிவைப் பெற்றுக் கொள்ளவில்லை;

(ஏ) இதுவரை இயக்க வெளியீடுகளாக அச்சிடப்பட்டவைகளை பலமுறை திருப்பித் திருப்பிப் படித்து அதில் முக்கியமானவைகளை அப்படியே மனப்பாடமாகப் படித்துத் தேவையான பொழுது திருப்பிக் கூற முடியவில்லை;

(ஐ) இயக்கத்தின் உயிர்நாடியான அருளுலகப் பயிற்சிகளைச் செய்து அருளை அநுபவப் பொருளாக வழங்கும் வல்லமைகளைப் பெறவில்லை;

(ஒ) இயக்கத்தின் உயிர்நாடியான அ.வி.தி.யைப் பற்றி முறையாகவும், நிறையாகவும் தெரிந்து கொள்ளவில்லை;

(ஓ) நமது இயக்க வீரர்கள் ஒன்று கூடுவது இன்பமாகப் பொழுது போக்குவதற்காகத்தான் என்ற ஒரு தவறான போக்கு வளர்ந்து விட்டது. இயக்கத்திற்குள்ளேயே அதிகம் படிக்காதவர், வேலை பார்ப்பவர், வேலை பார்க்காதவர், அதிகம் சம்பாதிப்பவர், குறைவாகச் சம்பாதிப்பவர்.... என்ற பிரிவினைகளை சிறுபிள்ளைத்தனமாக வளர்ப்பவர்கள் அதிகமாகி விட்டார்கள்;

(ஔ) சூது விளையாடல், மதுவில் மயங்கித் திளைத்தல், திரைப்படம் போன்ற போலிக் கேளிக்கைகளில் நேரத்தை வீணாக்குதல்.... என்று விடுதலை இயக்கப் புரட்சி வீரர் கூட்டமே வெட்டிக் கூட்டமாக, வீணர் கூட்டமாக ஆவதற்குரிய சூழ்நிலைகள் தோன்றி விட்டன;

(ஃ) இயக்கப் பணிக்காக எதையுமே செய்யாத திண்ணைப் பேச்சு வீரர்களாக மாற்றும் தவறான முயற்சி இயக்கத்துக்குள் காட்டுத் தீ போல் பரவ ஆரம்பித்து விட்டது;

என்பனவற்றை விளக்கி எழுதியுள்ளேன். எனவேதான், அதிரடி முயற்சியாக <u>குற்றம் செய்தவர், செய்யாதவர், நல்லவர், கெட்டவர், மெய்யானவர், பொய்யானவர்</u>.... என்ற வேறுபாடெல்லாம் இல்லாமல் ஒட்டு மொத்தமாக சம்மந்தப்பட்ட அனைவரையுமே கடுமையாக விமர்சித்துச் செயல்நிலைகளுக்குத் தடை விதித்து அனைத்தையும் எனது நேரடிப் பார்வையில் ஏற்றுள்ளேன்.

எனவேதான், அ.வி.தி. செயலாளருக்கு 100 பக்க அளவில் ஒரு கட்டுரையையும்; அதில் மூன்றிலொரு பங்காவது பெரிய அளவினதாய் உள்ள தமிழ்மொழி பற்றிய ஒரு கட்டுரையை இயக்கத் தலைமைப் பொறுப்பாளராகிய உமக்கும் எழுதுகிறேன். இது அச்சாகி வெளிவர நாளாகுமென்றாலும், இது கையெழுத்துப் பிரதியாக விரைவில் நமது இயக்க முன்னணி வீரர்களனைவர்க்கும் கிடைத்து விடும்.

இந்த இரண்டு கட்டுரைகளும் வரலாற்று முதன்மைக்கும் சிறப்புக்குமுரியன. ஏனெனில், இவைதான் நமக்குள் இடது சாரியினர், வலது சாரியினர் என இரண்டு சாரியினர் மட்டுமில்லை. ஆனால், நமக்குள் மிதவாதிகளும், விரோதப் போக்குள்ளவர்களும், மிதவாதப் போக்குள்ளவர்களும், வெறுமைப் போக்குள்ளவர்களும், வறுமைப் போக்குள்ளவர்களும், கேலிப் போக்குள்ளவர்களும், காலிப் போக்குள்ளவர்களும், மீதிப் போக்குள்ளவர்களும், சந்தர்ப்பவாதப் போக்குள்ளவர்களும், அப்பாவி ஏமாளிப் போக்குள்ளவர்களும், பிறர் சொல் கேட்கும் போக்குள்ளவர்களும்,.... என்று பலவகையினரும் இருக்கிறார்கள் என்ற பேருண்மையையும் விளக்கிக் காட்டப் போகின்றன.

எனவேதான், நமது நாட்டுச் சமய, சமுதாய, கலை, இலக்கிய, தொழில், அரசியல்,... முதலிய துறைகளில் தமிழின் பெயரால் பொருளும், புகழும், பதவியும், பட்டமும் சம்பாதித்துச் சுகவாழ்வு வாழும் சுயநல வாதிகள், சந்தர்ப்ப வாதிகள், பேராசைக் காரர்கள், துரோகிகள், விரோதிகள், கைக்கூலிகள், கங்காணிகள், காலிகள், கருங்காலிகள், போலிகள், ஏமாற்றுக்காரர்கள், சுரண்டல்காரர்கள்.... முதலியவர்களின் மாறுவேடங்களைக் கலைக்கவும், முகமூடியைக் கிழிக்கவும் எடுத்துக் கொண்ட முயற்சியாகவே, '*தமிழுக்கு என்னென்ன செய்ய வேண்டும்? எப்படி யெப்படிச் செய்ய வேண்டும்? எவ்வெப்பொழுது செய்ய வேண்டும்?*' என்ற இந்தக் கட்டுரை அமைந்துள்ளது..

ஏனெனில், நீயும் நானும்தான் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இடைவிடாது படித்தும், எழுதியும், உரையாடியும் செயல்பட்டு வருகிறோம். எனவே, நீ என் அருகிலேயே இருந்த பொழுதும்; என்னால் ***கவிக்குமார்*** என்ற சிறப்புப் பெயர் பெற்ற தமிழ்ப் பித்தனை உனக்குத்தான் தமிழ் பற்றிய இந்தக் கட்டுரை எழுதப்பட வேண்டும் என்று முடிவெடுத்தேன் நான். இது எல்லாவகையிலும் பொருத்தம் உடையதேயாகும்.

3) தமிழ் மொழியில் அளப்பரிய பற்றும், ஆழ்ந்த புலமையும் உடைய எனதருமை ஏற்புச் செல்வ! நீ, எனக்காக இரவு பகலென்று பாராமலும்; வெயிலென்றும் மழையென்றும் பாராமலும்; வண்டிப் பயணமென்றோ, நெடுந்தொலைவு நடைப் பயணமென்றோ பாராமலும்; என்னருகில் புத்தகத்தை மணிக்கணக்கில் தொடர்ந்து படித்துப் படித்து அறிவுப் பணி புரிந்தவன் நீ! இன்னும் சொல்லப் போனால், நீ, நான் உறங்கி விட்டேனா அல்லது கவனிக்கிறேனா என்பதைக் கூடக் கருத்தில் கொள்ளாமல், எனக்காக எல்லாவகையான புத்தகங்களையும் உனக்குச் சுவையிருக்கிறதோ, இல்லையோ மணிக்கணக்கில் தொடர்ந்து படித்துச் சேவை புரிந்தவன் நீ.

உன்னுடைய அறிவியல் தொண்டும், நீ எனக்காகச் செலவிட்ட காலமும், வழங்கிய உடலுழைப்பும் உருவாக்கியவைதான் நூற்றுக் கணக்கான கோப்புக்களில் தமிழினத்தின் மொழி வரலாறாக, இன வரலாறாக, நாட்டு வரலாறாக, பண்பாட்டு வரலாறாக, நாகரீக வரலாறாக, சமய வரலாறாக, சமுதாய வரலாறாக, அரசியல் வரலாறாக, இந்திய வரலாறாக, உலக வரலாற்று மூலங்களாக, சித்தர் நெறித் தத்துவங்களாக, சித்தர்களின் சாதனைகளான அறிவியல்கள், கலைகள் முதலியவற்றின் குறிப்புக்களாக, மானுடவியலின் மறைபொருள்களாக, உலக மதங்களின் சாரங்களாக, ... இருக்கின்றன.

நீ மட்டும் நான் கூறியவைகளை அவ்வப்போது அருகிலிருந்து எழுதித் தொகுத்திரா விட்டால் இன்றைக்கு நமக்கு இலக்கிய வளமோ, வலிவோ, பொலிவோ உருவாகியிருக்க முடியாது. இதேபோல், பதினெட்டாண்டுப் பயிற்சிக் காலத்தையும், பதினெட்டாண்டு முயற்சிக் காலத்தையும் கடலோடிக் காடோடி நாடோடி வாழ்வில் வானம்பாடி போல் வாழ்ந்து கழித்திட்ட எனக்கு இன்றைய உலகியல் நடப்புக்கள் அனைத்தும் நன்கு புரிந்திட்டதற்குக் காரணமே கடந்த பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாக கணக்கற்ற புத்தகங்களை இரவு பகலாக

என்னருகிலிருந்து படித்துக் காட்டி எனது கேள்வி அறிவை (செவி அறிவை) வளமாக்கியதுதான்.

இவற்றிற்கெல்லாம் ஓரளவாவது நன்றிக் கடன் செலுத்த வேண்டும் என்பதற்காகத்தான் 12வது பதினெண் சித்தர் பீடாதிபதியின் ஏற்புச் செல்வனுக ஏற்றதோடு; உன்னே ஓரளவாவது நம்மவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய உன்நிலே விளக்கமாக (அருள்மிகு அங்காள பரமேசுவரி சன்னிதானம், குருவாணே ஓலே நாயகம், தலைமைப் பொறுப்பாளர், செத்தாரையும் எழுப்ப வல்ல முத்திரை மோதிரம் பெற்ருர், பிறமாச்சாரியார், அருளாட்சி நாயகம் ஞாலகுரு சித்தர் கருவூரரின் ஏற்புச் செல்வர் சி. கவிக்குமார் B.Sc.) இந்தத் தமிழ் பற்றிய கருத்து விளக்க அஞ்சல் வடிவக் கட்டுரை எழுதப் படுகிறது. இதன் மூலமாவது அரசியல் வாதிகளும், சமய வாதிகளும், சமுதாய வாதிகளும், இலக்கிய வாதிகளும், கலேயுலக வாதிகளும் தமிழ் பேரால் செய்யும் மோசடிகள் தடுக்கப்படட்டும். ஏமாற்றுக்கள் அகற்றப்படட்டும்.

**ஞாலகுரு சித்தர் கருவூரர்,**

**6/3/87.**

**<u>நகல் எழுதியவர்:</u>** அருள்மிகு கஞ்சமலே காளாங்கிநாதர் சன்னிதானம், அருள்மிகு நார்த்தாமலே மாரியம்மன் சன்னிதானம், அருள்மிகு மதுரை ஆலவாய்மூதூர் மீனுட்சியம்மன் சன்னிதானம், அருட்சேனேத் தளபதிகளுள் ஒருவர், துரோணுச்சாரியார் பீடம், கவிமேகம், சித்தர் மகன், இல.க.கணேசன், சென்னே-11.

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: சித்தரடியான் திரு இல.க.கணேசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# குருதேவரின் அருட்பயணம்

8-3-87 ஞாயிறன்று குருதேவர் காரணோடையில் உள்ள கருகுலத்தில் பூசைகள் செய்ய வேண்டி அருட்பயணம் நடத்தத் திட்டமிட்டார்.

1) 26-2-1987 அன்று குருதேவரே பூசையில் அமர்ந்து அம்மாவிற்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவை தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் நீக்கியதற்கும்; 2) கருகுலத்தில் சித்தரடியான் நாகேசுவரனின் முயற்சியால் கிணறு வெட்டுவதற்கு கிடா வெட்டிப் பூசை செய்ய ஒப்புக் கொண்டதாலும்; 3) தலைமைப் பொறுப்பாளர் சி.கவிக்குமாரை ஏற்புச் செல்வனாக அறிவிக்க வேண்டியதாலும்; மேற்கூறிய நாளில் பூசைகளைச் செய்வதென முடிவெடுக்கப்பட்டது.

மேற்படிப் பூசை இரண்டு பகுதியாக நிகழ்த்துவது என முடிவெடுக்கப்பட்டது. 7-3-87 அன்று புத்துயிர்ப்புச் செய்வது என்றும்; பின்னர் முன்னோடும் கருப்புக்கு செய்யும் பூசை. அன்றைய பூசையில் கலந்து கொள்பவர்கள் மட்டுமே மறுநாள் நடைபெறும் ஞாயிற்றுக் கிழமை பூசையில் கலந்து கொள்ள வேண்டும் என்று குருதேவர் கூறினார்.

6-3-87 அன்று விண்ணுலகிலிருந்து சத்தி அண்டத்திலிருந்து தாத்தா கருவூரர் அவர்களின் சார்பாகவும், தாய்லாந்து நாட்டு இளவரசி பாட்டி பொன்னிறப்பாவையின் அனுமதியின் பேரிலும் 16, 18 வயதுக்குட்பட்ட சத்தி, ஆதிசத்தி, அனாதிசத்தி, ஆதிஈசுவரி, அனாதிஈசுவரி தேவி விரைவாக மண்ணுலகை அடைந்தார்களாம். குருதேவரை ஏற்றுத் தமிழகம் முழுக்கச் சென்று விட்டு வருவதாகக் கூறினார்களாம்.

7-3-87 அன்று இரவு ஆதிசத்தி அனைவருக்கும் அருள் வழங்கினார்கள். கவிக்குமாரை ஏற்புச் செல்வனாக ஏற்று, குருவானை ஓலைநாயகமாக ஏற்று அனைவருக்கும் வாழ்த்துதலையும், அருளையும் வழங்கினார்கள். மேலும், அருட்படை தயாரிக்கத் தேவையான இடத்தையும்; அருட்படைத் தலைவியாக எருமைவெட்டி பாளையத்தில் நான்கு யுகமாக வாழ்ந்து வரும் பகவதியையும் குருதேவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

8-3-87ஆம் தேதி காலை 6:00 மணிக்கு குருதேவர், "கருகுலத்தில் ஆட்டுக் கிடாய் பலி தந்துவிட்டு **எருமைவெட்டி பாளையம்** செல்ல வேண்டும்" எனக் கூறினார். கவிக்குமார், பெருமாள், DM சுப்பையா, முத்துராசமூர்த்தி, குருசாமி, சுந்தரானந்தா, மோகன் ஆகியோர் தலைமைப்பீடத்தில் முன்னறிவிப்புப் பூசையில் அறிவித்து விட்டுக் கருகுலம் செல்லப் புறப்பட்டோம்.

கருகுலத்தில் சுமார் காலை 10:10 மணிக்கு ஆட்டுக்கிடா பலியாகத் தரப்பட்டது. சுமார் 10:30 மணிக்கு எருமைவெட்டி பாளையம் புறப்பட்டோம். உடன் சண்முகானந்தம், PTC சுப்பிரமணி குடும்பத்தினர்கள், ந.சண்முகம் உடன் வந்தனர்.

எருமைவெட்டி பாளையத்தில் கோசலையாற்றங் கரையில் இருந்த *மொலக்காலம்மன்* என்று பொதுமக்களால் அழைக்கப்படும் அம்மன் கோயிலுக்குச் சென்றோம். இந்த ஊருக்குச் சென்றதாகவோ, அங்குள்ள கோயில்களைக் கண்டதாகவோ குருதேவர் தம் நினைவில் இல்லை என்று கூறினார். ஆனால், இப்படிப்பட்ட இடத்தை எப்படி விண்வெளி சத்தி கண்டு பிடித்தது? ஏன் அருட்படைக்கு இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள்? என்று புரியாமல் குருதேவர் பயணப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், காரணோடைக்கு அப்பால் மேற்கு முகமாகப் பயணப்பட, அங்கு நிலவிய சூழ்நிலையைக் காணக் காண, இயற்கையை நோக்க நோக்க; உறுதியாக இந்த இடம் மிகப்பெரிய போர் நிகழ்ந்திருப்பதற்கும்; மிகப்பெரிய நகரம் கோட்டை மதில்களோடு அழிந்திருப்பதற்கும் உரிய ஒன்றாக இருக்கும் என்றும் தெரிய வந்தது. போர்ப்படைத் தெய்வமான **பகவதி**க்குத்தான் எருமையை வெட்டிப் பலியிடுவார்களாம். எனவேதான், காரணப் பெயராக இவ்வூர் அமைந்துள்ளது.

குருதேவருடன் திறந்தே இருந்த கோயிலுக்குச் சென்றோம். தேங்காய் பழம் வைத்துப் பூசையைத் துவங்கினோம். ***மொலக்காலம்மன்*** என்பது தவறு என்றும்; **'முழுக்க ஆள் (ஆட்சியில் உள்ள) அம்மன்'** என்றும்; விண்வெளியைச் சார்ந்த பெண் என்றும்; முழுக்க முழுக்க ஆட்சியில் இருப்பதாகவும்; எனவேதான், விண்வெளி ஆதிஈசுவரி கண்டுபிடித்திருக்கலாம் எனக் குருதேவர் கூறினார்.

சுப்பிரமணி குடும்பத்தினரை நிறுத்திப் பூசை செய்தோம். சுமார் 12:10 மணியளவில் முழுக்க ஆள் அம்மன் செந்தில்குமாரை வெளியே அனுப்பிப் பலிபீடத்தில் நின்று மந்திரிக்குமாறு கூறினார். சற்று நேரத்தில் 12:40 மணியளவில் அங்கிருந்து அனைவரும் பலிபீடத்தை சுற்று சுற்றிப் புறப்பட்டோம்.

**<u>அருளுலக விளக்கம்:-</u>**

விண்ணுலகிலிருந்து இந்த சத்தி வந்துள்ளதாகவும், உயிரோடு உள்ளதாகவும் குருதேவர் கூறினார். இவர்களோடு தொடர்புடைய இன்னும் குறைந்தது நான்கு பேர்களாவது இந்த ஆற்றங்கரையோரம் இருக்க வேண்டும் என்றும் குருதேவர் கூறினார். மேலும், சத்தி அண்டத்துப் பெண்ணாக இந்த அம்மன் இருப்பதால்தான் அருள்மிகு தேவதேவி மிக எளிமையாக இவர்களை அடையாளம் கண்டு

கொண்டதாகக் கூறினர். தன் மகனுக, வாரிசாக கவிக்குமாரை மந்திரிக்க உள்ளே அழைத்தார் குருதேவர். ஆனுல், அம்மனே விந்துவழி வாரிசு அல்ல என்று கூறியதால் செந்தில்குமாரை அழைத்து வெளியே நின்று மந்திரிக்கச் சொன்னுர். கவிக்குமார் உடைந்த (கை) சிலேயில் கையை வைத்துத் தொட்டுப் பார்த்தவுடன் அம்மன் எழுந்ததாகக் குருதேவர் கூறினுர்.

அங்கிருந்து புறப்பட்டவுடன் நண்பர் சண்முகம் செல்லும் வழியில் பாழடைந்த சிவன் கோயில் உள்ளதாகக் கூறினுர். உடனே நாங்கள் நின்ருேம். செல்லும் வழியில் சாலே சரியாகவே இல்லே என்ருலும், சிலரை மட்டும் அனுப்பிப் பார்த்து வருமாறு கூறினுர் குருதேவர். சண்முகம், மோகன், சீனிவாசன், ... சென்று விட்டு சிற்பங்கள் நன்ருக உள்ளதாகவும், பார்க்க வரலாம் என்றும் கூறியவுடன் வண்டி கோயிலருகே உள்ள புளிய மரத்தின் கீழ் நின்றது.

கீழே இறங்கியவுடன் குருதேவர் இங்கே அருகில் எங்காவது பீடம், மேடை, சமாது, ... உள்ளதா என்று விசாரித்தார். அங்கிருந்த சிலர் இல்லேயென்றும், அருகில் இருந்த பெரிய மேடை ஒன்றைக் காட்டினர். குருதேவரின் அருட்கணிப்பாக “இந்த சிவன் கோயில் மிகவும் சத்தி வாய்ந்தது. சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. சுமார் 1000 ஆண்டுகளாக இந்தப் புளியமரம் உள்ளது. நிறைய முடிச்சுகள் கொண்டுள்ளது. விஷ்ணுவர்த்தனன் காலத்தில் கட்டப்பட்டது. இந்தக் கோயில் கட்டிய மன்னனின் சமாதே அருகில் உள்ள மேடை. இதுவே தேர் மேடையாகவும் பயன்பட்டு வந்துள்ளது” என்ருர்.

பக்கச் சுவர் இடிந்திருந்தது. அதையே வாயிலாக எண்ணி உள்ளே வந்தோம். கோபுர வாயில் சாத்தி பூட்டியிருந்தது. இக்

கோயில் சமீப காலமாகத்தான் ஆண்டார்குப்பம் கோயில் தேவத்தானத்தின் கீழ் செயல்படுவதாகக் கூறினார்கள். கோபுர நுழைவாயில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முந்திதான் கட்டப்பட்டது என்று கூறி; இதற்கும் கோயிலுக்கும் சம்பந்தம் இல்லை என்று குருதேவர் கூறினார்.

உள்ளே சென்றதும் பூட்டி இருந்த கருவறைக் கோயிலின் வாசலில் அமர்ந்து சிவபுராணம் கூறும்படி குருதேவர் கூறினார். முடிந்ததும் கவிக்குமார் பொதுமக்களுக்கு திருநீறு பூச, எழிலரசி குங்குமம் பூசப் பூசை முடிந்தது. அதே மண்டபத்திலிருந்த அம்மனை வணங்கி விட்டுப் புறப்பட்டோம்.

அங்கிருந்த மக்களை விசாரிக்கும் போது சிவன் கோயிலுக்கு எதிரே உள்ள மலைமேல் இருந்த கோயில்தான் எருமை வெட்டும் கோயில் என்றும், சிலர் ஊருக்கு வரும் வழியில் உள்ள ஒரு கோயிலில்தான் எருமை வெட்டுவதாகக் கூறினர்.

பகவதி = பகவன் மனைவி; பகவதிக்குத்தான் எருமை வெட்டுவார்கள் என்றும், அதுதான் போர்த் தெய்வம் என்றும் குருதேவர் கூறினார். எதற்கு எந்தக் கோயிலுக்குச் செல்வது என்று யோசனை செய்யும் போது சண்முகமும், சீனிவாசனும் ஊரின் ஆரம்பத்தில் உள்ள கோயிலுக்குச் செல்ல, நாங்கள் குன்றின் மேல் இருந்த கோயிலை நோக்கிப் புறப்பட்டோம்.

சுமார் 1:30 மணியளவில் மேல் நோக்கிப் புறப்பட்டோம். சுற்றி செம்மண் கோட்டைச் சுவர் போல் திண்டு பறந்தது. மண் கோட்டைக்குள் பெரிய பெரிய ஊராக இருந்ததாகக் குருதேவர் கூறினார். மிகப்பெரிய போரோடு இந்த ஊர் அழிந்ததாகக் கூறினார்.

மேலே இருந்த கோயில் அங்காளம்மன் என்றார் பூசாறி. நாங்கள் வரும்வரை ஒரு நடுத்தர வயது மதிக்கத் தக்க பெண்மணியை நிறுத்தி வேப்பிலையால் அடித்துக் கொண்டிருந்தார். அது மிகவும் போலியாகவும், நாடகமாகவும் இருந்தது என்பதை உணர்ந்தோம். பூசாறி அழைத்ததும் உள்ளே சென்றோம்.

அந்தக் கோயிலில் ஆடு மட்டுமே பலி தருவது என்றும்; அண்மையில் சுந்தரம் குருக்கள் விழா செய்து பின்னர் பலியை பலிபீடத்தில் தராமல் வெளியே தருவதாகப் பூசாறி கூறினார். நாங்கள் திரும்பும் போது பலியாக ஆடு தந்து கொண்டிருந்தார்கள். இந்த அம்மன் அங்காளம்மன் என்று கூறினார்கள். அதற்குள் சண்முகம் வந்து வேறு கூறினார். கழனிகளின் நடுவில்தான் எருமை பலி வாங்கும் அம்மன் என்று கூறி அதை வணங்கி விட்டு வந்தார்.

உடனே காரணோடை நோக்கிப் புறப்பட்டோம். பின்னர் மாலை சூரப்பட்டு புறப்பட்டோம். இரவு 8.00 மணிக்கு சென்னைக்கு மீண்டோம்.

இப்படிக்கு,

அன்பு

தலைமைப்பீடச் சித்தரடியான்கள்.

**நகல்:** அன்பு சித்தர் மகன் ப.செயபால்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு ப.செயபால் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

ஓம்

**அருள்மிகு பவானியம்மன் சன்னிதானம் திரு சு.ஞானசேகரன் அவர்கள் சமூகத்திற்கு நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், ஞாலகுரு சித்தர் கருவூரார் 17/4/87இல் விடுக்கும்**

# பட்டாள வீரனுக்குப் பரிந்துரை மடல்

1) 'பட்டுப் போதல்' என்றால் செத்துப் போதல் என்று பொருள். பட்டாளம் என்றால் போரில் தன்னை வீரமாகச் சாகடித்துக் கொள்ளத் தயாராக இருக்கும் தற்கொலைப் படைக்குப் பேரே பட்டாளம். தமிழில் படை, சேனை என்ற இரண்டிலும் பட்டாளம் என்பதுதான் உயிர்நாடியாகவும், அடிப்படையாகவும், முன்னோடியாகவும் இருந்திடும். தமிழகத்து வேந்தர்கள் முதல் சிற்றரசர்கள் அல்லது சிற்றூர் மன்னர்கள், புரட்சிக் காரர்கள் வரை தங்களுக்கெனப் படை திரட்டுவது என்றால் முதலில் தத்துவத்திற்காக அல்லது தலைவனுக்காகத் தங்களையே பலியிட்டுக் கொள்ளக் கூடிய அல்லது பலியாக்கிக் கொள்ளக் கூடிய அல்லது பேருண்மைகளைக் காத்திடுவதற்காகத் தற்கொலை செய்து கொள்ளத் தயாராக இருக்கும் பட்டாளத்து வீரர்களைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்படும் வீரர்களைக் கொண்டு கணிசமான அளவுடைய ஒரு பட்டாளத்தை உருவாக்கிய பிறகுதான் அவர்களைத் தற்காப்புப் படையாக, மெய்க்காவல் படையாக, ஆபத்துதவிப் படையாக ஏற்று நாடு தழுவிப் படை திரட்ட ஆரம்பிப்பார்கள்; போருக்கும் தயாராவார்கள்.

இப்பொழுது, 'தமிழ்மொழி விடுதலை', 'தமிழின விடுதலை', 'தமிழ்ப் பண்பாட்டு விடுதலை', 'தமிழ் நாகரீக விடுதலை' என்ற நான்கு

வகையான விடுதலைப் படைகள் திரட்டப்பட்டாக வேண்டிய அவசர அவசிய நிலை வந்திருக்கிறது. ஆனால், இதற்குரிய பட்டாளம் இன்னும் திரட்டப்பட வில்லை. எனவேதான், மேற்கூறிய நான்கிற்கும் பொதுவான அல்லது இணைப்பான அல்லது அடிப்படையான அல்லது உயிர்நாடியான இந்து மறுமலர்ச்சி இயக்கத்திற்கான அருட்படை திரட்டப்படுகிறது. இந்த அருட்படைக்குத்தான் பாடிவீடுகள் அமைக்கப் பட்டுப் பயிற்சிகள் தரப்படுகின்றன. அவைதான் அ.வி.தி. நிலையங்கள். இவை வெற்றி பெற்ற பிறகுதான்; முரசு முழக்கிப் பறை அறைவித்து, படை அணிவகுத்துப் புறப்பட்டு, பாசறை கட்டித் தண்டு இறங்கித் தங்கி, வியூகம் அமைத்து; தமிழ்மொழிப் பகைவர்களை, தமிழினப் பகைவர்களை, தமிழ்ப் பண்பாட்டுப் பகைவர்களை, தமிழ் நாகரீகப் பகைவர்களைச் சந்திக்க வேண்டும்.....

எனவே, இந்த **இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அருட்படைக்குப் பட்டாளம் தேவை**. இந்தப் பட்டாளத்திற்குத் தன்னிகரற்ற பெருவீரர்களாக, மாவீரர்களாக பலர் கிடைத்தார்கள்; ஆனால், அவர்கள் எதையெதையோ எதிர்பார்த்து வந்தார்கள், என்னென்னவோ கற்பனைகளோடு வந்தார்கள்; அதைக் கண்டித்து அந்தக் குருட்டுநிலை, மருட்டுநிலை, இருட்டுநிலை கூடாது என்று திருத்தம் செய்ய முற்பட்டபோது, அவர்களெல்லாம் மெய்யாகவே பயனற்ற தற்கொலையாளர்களாக ஆகிவிட்டார்கள். அதாவது, அவர்கள் தங்களின் அறிவு, ஆற்றல், அநுபவம் அனைத்தையுமே தலைமைக்குக் கட்டுப்படாமல் தான்தோன்றித்தனமாகவும், வெறித்தனமாகவும் செயல்படுத்தி வீணாக்கி விட்டார்கள்; அவர்களும் வீணாகிப் போனார்கள்.

எனவேதான், <u>வீரபாண்டிய கட்டபொம்மனுக்கோ, சான்சி இராணிக்கோ, திப்பு சுல்தானுக்கோ நிகழ்ந்த கதி இன்றைய தமிழின இளைய தலைமைத் தலைமுறைகளுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்றஞ்சி;</u> மிகவும் நிதானப் போக்கையும், சமாதானப் போக்கையும்

கையாளுகிறோம். எம்மிடம் வருபவர்கள் அனைவரையும் **அருட்பெருஞ்சுடர்களாக ஆக்கி மானுடரின் அக இருள்களையும், புற இருள்களையும் அகற்றும் பணியைத் துவக்கியிருக்கிறோம். இம்மாபெரும் பணியைத் தமிழால்தான் செய்ய முடியும்.** ஏனெனில், தமிழே அண்டபேரண்டமாளும் அருளுலக ஆட்சிமொழி. அதுவே என்றென்றும் மாறாத செழிப்புமிகு, பசுமைவளர் பைந்தமிழ் மொழி. அதுவே இளமைநலம் குன்றாத கன்னித் தமிழ்மொழி. இம்மொழியில்தான் விண்ணையும், மண்ணையும் இணைக்கும் அனைத்து வகையான வழிவகைகளும் இருக்கின்றன. இந்த மொழியின் எழுத்துக்களுக்கும், சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும் அருளூறச் செய்யும் தெய்வீக ஆற்றல் உண்டு. இப்படிப்பட்ட மொழியைப் பேசுகின்ற மக்களிடையே ஏற்பட்டிட்ட வீழ்ச்சி நிலைகளைப் பற்றி எண்ணிப் பார்க்க ஆளில்லை.

2) நண்ப! தங்களுடைய 8-4-87ஆம் நாளைய அஞ்சலும், 15-4-87ஆம் நாளைய அஞ்சலும் தங்களின் தமிழார்வம் - 'காட்டாற்றின் கோடைக்காலப் புதுவெள்ளம் கரையை உடைத்துக் கொண்டு நாலாபக்கமும் பாய்வது போல்' - தங்களின் மொழிப் பற்று, இனப் பற்று, நாட்டுப் பற்று, பண்பாட்டுப் பற்று, நாகரீகப் பற்று, தன்மான உணர்வு, இனமான உணர்வு, ... முதலிய அனைத்துக் கரைகளையும் உடைத்துக் கொண்டு சொல்லாறாகப் பாய்ந்து வந்ததைக் கண்டோம். என்ன செய்வதென்று புரியவில்லை. தாங்கள் இப்படி உணர்வுப் புயலாக இருப்பது போல் கணிசமான அளவினர் நம் நாட்டில் இருப்பதால்தான் நம்மிடையே சூடு, சுரணை, மானம், வெட்கம், நாணம், தன்னம்பிக்கை, இனவுணர்வு, பற்று, பாசம், மொழிப் பற்று, மொழியுரிமை நாட்டம், ... முதலியவை ஓரளவாவது கண்ணால் காணுகின்ற அளவிற்காவது இருக்கின்றன; அல்லது உணருகின்ற அளவிற்காவது இருக்கின்றன. எனவே, தங்களைப் போன்றவர்கள் தேவை, தேவை, தேவை. நன்றி.

3) தாங்கள் தமிழுக்குத் தொண்டு செய்ய நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன. வசதிகள் இருக்கின்றன. அச்சேற வேண்டிய நூல்கள் ஏராளமாக இருக்கின்றன. அச்சேறியும் மக்களால் படிக்கப்படாத நூல்கள் ஏராளமாக இருக்கின்றன. தமிழுக்குத் தொண்டு செய்வதாகக் கூறிக் கொண்டு புறப்பட்டவர்கள் எல்லாம் தேனையெடுத்தவனே குடித்து முடித்த கதையாக; தமிழின் பெயரைச் சொல்லி திரட்டிக் காட்டிய செல்வாக்கைப் பயன்படுத்திப் பட்டம், பதவி, பணம், புகழ், அதிகாரம், ... முதலியவைகளைச் சம்பாதித்துக் கொண்டு தமிழ்மொழியைக் காட்டிக் கொடுத்தும், கூட்டிக் கொடுத்தும், அடிமைப்படுத்தியும், மிடிமைப்படுத்தியும், சிதைத்தும், சீரழித்தும், இழிவுபடுத்தி விட்டார்கள்.

அதாவது, தமிழின் பெயரைச் சொல்லிக் கொண்டு பொதுவாழ்வில் ஈடுபட்டவர்களில் **பெரும்பாலானவர்கள்** காலப்போக்கில் காலிகளாக, கருங்காலிகளாக, போலிகளாக, அன்னியரிடம் கூலிகளாக, அன்னியர்க்கு வேலிகளாக, அன்னியர்க்குத் தாலிகட்டிய பெண்டுகளாக மாறிவிட்டார்கள். எனவேதான், தமிழ்மொழி விடுதலை என்ற உணர்வும், சிந்தனையும் வெறிநாய் கடித்துக் குதறிய பழைய நைந்துபோன கந்தல் துணியாகி விட்டது. இப்பொழுது யார் 'தமிழ் வாழ்க' என்று கூறினாலும் மக்கள் அவர்களை நம்புவதில்லை.

இன்னும் சொல்லப் போனால்; மக்கள், "எவன் தமிழ் வாழ்க என்று கூறினாலும், அவன் ஏதோ ஓர் ஆதாயத்தை வைத்துக் கொண்டுதான் கூறுகிறான் என்று பொருள்; உண்மையில் எவனுக்கும் தமிழை வாழவைக்கும் அக்கறையில்லை. அன்னிய மொழிக்காரனை அங்காடியிலும், ஆலயத்திலும், அரசியலிலும் தலைவனாக அனுமதிக்கின்ற இவனுகளுக்குத் 'தமிழ் வாழ்க' என்ற முழக்கம் ஒரு கேடா? இவனுக பணம் சம்பாதிக்கறதுக்கு அல்லது ஓட்டு வாங்கிப் பதவிக்குப் போறதுக்காகத்தான் தமிழ் வாழ்கன்னு ஊளையிடுறானுக. இவனுகதான்

உண்மையிலேயே தமிழ்த் துரோகிங்க, விரோதிங்க. இவனுகளைத் திருத்திஞல் போதும், மற்ற எல்லாரும் திருந்திடுவாங்க. கைக்கூலி வாங்குகிற கங்காணிப் பசங்கல்லாம் அப்பப்பத் தெருக்கூத்துப் போடுவது போல் ‘தமிழ் வாழ்க’, ‘தமிழ் வாழ்க’ என்று ஊர்வலம் வரானுக. அல்லது மாநாடு போடருனுக அல்லது போராட்டம் நடத்துருனுக. ...” என்று மிகமிகக் கேவலமாகப் பேசுகின்ற நிலை நாட்டில் வந்து விட்டது.

எனவேதான் யாம், “இந்த நிலை ஏன்? எதற்காக? இதற்காக என்னென்ன செய்ய வேண்டும்? எப்படியெப்படிச் செய்ய வேண்டும்?” என்ற தலைப்பில் எழுதிய 100 பக்கக் கட்டுரையையும்; இந்தக் கட்டுரைக்கு முன்னுரையாக யாம் எழுதியுள்ள “தமிழுக்கு என்னென்ன செய்ய வேண்டும்? எப்படி யெப்படிச் செய்ய வேண்டும்? எப்பொழுது செய்ய வேண்டும்?” என்ற தலைப்பில் எழுதிய 15 பக்க முன்னுரையையும்; “தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாக இருப்பது ஏன்?” என்ற தலைப்பில் யாம் எழுதியுள்ள 210 பக்க அளவுள்ள சிறு நூலையும் தாங்கள் பலமுறை திருப்பித் திருப்பிப் படித்திடல் வேண்டும். பலரிடமும் படித்துக் காட்டப்படல் வேண்டும்.

கூடுமாஞல் **தமிழுக்காக இறப்பதற்கும் தயாராய் உள்ள தாங்கள் இவற்றை யெல்லாம் அச்சடித்துத் தமிழகம் முழுவதும் பரப்ப வேண்டும். அல்லது விரல்கள் ஓய்வைத் தேடும் வரை, கண்கள் உறக்கத்தை நாடும் வரை இரவு பகலாக இவற்றிற்கு நகல்கள் எழுதிக் குவிக்க வேண்டும். அதுதான் தங்களின் கடமை, கடமை, கடமை.**

4) நண்ப! இம்மண்ணுலகுக்குத் தமிழைத் தந்த பதினெண்சித்தர்களின் நேரடியான விந்துவழி வாரிசாகிய யாம் தமிழை அரியணையில் மீண்டும் அமர்த்தித் தமிழின உரிமைகளையும், பெருமைகளையும் மீட்டுத் தருவதற்காக, அருளாட்சிப் பணியில் ஈடுபட்டிருக்கிருேம்.

இந்த நேரத்தில் தாங்கள் தங்களுக்கும் பயனில்லாமல், தமிழுக்கும் பயனில்லாமல் இறப்பைப் பற்றி எழுதியிருக்கிறீர்கள். இது சிறப்பா? சிறப்பா? சிறப்பா? அன்பு கூர்ந்து இறப்பது பற்றி எண்ணத்தை மறப்பா! மறப்பா! மறப்பா!

5) நண்ப! தனிமனித வாழ்வியல் துறையிலும், சமயத் துறையிலும், வணிகத் துறையிலும், கலைத் துறையிலும், இலக்கியத் துறையிலும், அரசியல் துறையிலும் தமிழ்மொழி உணர்ச்சியின் வீச்சும், தமிழின உணர்ச்சியின் ஆட்சியும் வீழ்ச்சியுற்றுத் தாழ்ச்சியுற்றுக் கிடக்கின்றன. இவை மீட்சி பெற்றால்தான் தமிழர்கள் எழிச்சி பெறுவார்கள்; விழிச்சி பெறுவார்கள்; கிளர்ச்சி செய்வார்கள்; அனைத்துத் துறையிலும் வளவளர்ச்சி பெறுவார்கள்; எதிலும் ஒன்றுகூடிச் செயல்படும் சமுதாய உணர்ச்சி பெறுவார்கள். அதற்காகத்தான் தமிழ்மொழி வழியாக அனைத்துத் துறைகளிலும் புதுமையை விளைவிக்க வேண்டும். அதற்காகக் கருத்துப் புரட்சிகளைச் செய்ய வேண்டும்.

அதற்காக நகரத்து நாகரீகங்களில் சிக்கித் தவிக்கின்ற மக்களை விட்டுவிட்டு கிராமிய மக்களிடையில் தமிழ்வழியாக ஒற்றுமை யுணர்ச்சியையும், பற்றுணர்ச்சியையும் உருவாக்க வேண்டும். இவற்றிற்கு எல்லாம் முழுமையாகத் தமிழ்மொழி வழிப்பட்ட மத வரலாறுகளையும், மதத் தத்துவங்களையும், மத இலக்கியங்களையும், மதக் கலைகளையும் மறுமலர்ச்சி அடையச் செய்ய வேண்டும், வளவளர்ச்சி அடையச் செய்ய வேண்டும். அதற்கு மதத்தின் மூலம் மக்களுக்கு தாய்மொழிப் பற்று, தாய்நாட்டுப் பற்று, இனப் பற்று, இன ஒற்றுமை, மொழியுரிமை, இன விடுதலை, கலை விடுதலை, ... முதலான அனைத்து வகையான கருத்துக்களும் செழித்து வளரும்படிச் செய்ய வேண்டும். அதற்கு அவரவர் வாழ்வில் மதம் இன்றியமையாத இடத்தைப் பெற வேண்டும்.

அதற்கு சமசுக்கிருத மொழி ஆதிக்கமும், பிருமணர்களின் வேதமத ஆதிக்கமும், வடஆரிய *ஹிந்துமதக்* கற்பனைகளும், ஆபாசங்களும் கலக்காத பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமதம்** மறுமலர்ச்சி பெற்றேயாக வேண்டும்.

நண்ப! இதற்காகத் தாங்களும் அருளாளராகுங்கள்; மற்றவர்களையும் அருளாளர்களாக ஆக்குங்கள். இதுவே தங்கள் கடமை, கடமை, கடமை. இதைப் புரிந்தும் புரியாதவராக! அறிந்தும் அறியாதவராக!; தெரிந்தும் தெரியாதவராக! ... ஏன் கலங்குகிறீர்கள், மயங்குகிறீர்கள், தயங்குகிறீர்கள். அன்பு கூர்ந்து வெளிச்சத்திற்கு வாருங்கள். பிறரையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வாருங்கள். எனவே, தமிழினத்தின் தத்துவ நாயகரின் தலைமையை ஏற்று முறையாகச் செயல்பட வாருங்கள். சிந்தியுங்கள். பிறரைச் சிந்திக்க வையுங்கள். செயல்! செயல்! செயல்!

**குருவாணை!**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்,**

**17/4/87.**

**<u>ஓலைநாயகம்:</u>** இளந்துறவி சுந்தரானந்தா.

கட்டாயமாகப் பல நகல்கள் தேவை.

**//உண்மை நகல்//**

**// நகல் நல்குபவர்:- அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், குருவின் பதிலி, சித்தரடியார் சீ.மணி. //**

ஓம்

# <u>நலம் பாராட்டுத் திருவோலை</u>

செம்பியம்,

5.5.87.

அருள்மிகு சித்தரடியான் திரு S.V.நம்மாழ்வார் அவர்கள் சமூகத்திற்கு;

ஞாஞச்சாரியார், தமிழின ஆச்சாரியார், இந்துமத ஆச்சாறியார், இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், அரசயோகி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர் எழுதிக் கொள்ளும் '**<u>நலம் பாராட்டுத் திருவோலை</u>**'.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. அனைத்துக்கும் அம்மையப்பன் துணையே.

2) தாங்கள் பேரார்வத்துடனும், ஆழமான நம்பிக்கையுடனும் எடுத்துக் கொண்ட தொடர் முயற்சியால்தான் இந்து முன்னணியினருக்கும், மற்ற இந்துமத இயக்கத்தவர்களுக்கும், நமது இயக்கத்திற்கும் இடையில் '**கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடல்**' நிகழ்ந்துள்ளமைக்கு மிக்க நன்றி, மகிழ்ச்சி. தங்களின் இச் செயல்வெற்றிக்கு பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் நெஞ்சம் நிறைந்த வாழ்த்து தெரிவிக்கப்படுகிறது.

3) இந்துமதத்தில் பற்றும், பாசமும், பத்தியும் மிகுதியாக உடைய இளமைவளர் நெஞ்சமுடைய இனிய நண்ப! தங்களைப் போன்றோர் ஆங்காங்கே அவ்வப்போது அரிய மூலிகை போல் கிடைப்பதால்தான்

எம்மால் மிகப்பெரிய அரிய பணிகளையும் கூட எளிமையாகச் செய்துவர முடிகிறது.

யாம் ஏறத்தாழ ரூ.1/- விலையில் மாதந்தோறும் ஓர் அறிக்கையை வெளியிட்டும், 5 பைசா விலையிலிருந்து ரூ.15/- விலையுள்ள புத்தகம் வரை பல வெளியீடுகளை அச்சிட்டு வெளியிட்டும், இலவசமாக மக்களுக்கு நூற்றுக்கணக்கான வகையில் சுமார் ஒரு கோடி அறிக்கைகளுக்கு மேல் அச்சிட்டு வழங்கியும் தளர்ச்சியோ, அயர்ச்சியோ இன்றித் தொடர்ந்து செயல்பட்டு வருகிறோம். ஆனால், இந்து மதத்தின் தலைவர்களையோ, தொண்டர்களையோ, ஆத்திகர்களையோ, நாத்திகர்களையோ குறிப்பிடத் தக்க அளவு எம்மால் ஈர்த்து கருத்துப் புரட்சியை விளைவிக்கவே முடியவில்லை.

அதற்குக் காரணம் எல்லாருக்குமே இந்துமதத்தின் தத்துவம், சித்தாந்தம், சடங்கியல், அருட்கலைகள்; அருளாளர்களின் வரலாறுகள், போதனைகள், சாதனைகள்; கோயில்களின் வரலாறுகள், போதனைகள்; இலக்கியங்களின் வரலாறுகள், நுட்பப் பொருட்கள்; மத நிறுவன நிருவாகங்களின் நோக்கங்கள், ... முதலியவைகள் பற்றிய அறிவு இன்றைய நடைமுறை வாழ்வில் மிகமிகக் குறைவு! குறைவு! குறைவு! இந்த அறிவைக் கற்பிப்பவர்களிடமும் ஆர்வமில்லை. கற்றுக் கொள்பவர்களிடமும் ஆர்வமில்லை.

ஆனால், குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்து எலியைப் பிடித்தது போல் எப்படியாவது தங்களுக்கு அருட்சித்தி வேண்டும் என்று அலைபவர்களும், எதன் மூலமாவது அருட்சத்தியைப் பெற்றுத் தங்களை நலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அலைபவர்களும்தான் மிகுதியாக இருக்கிறார்கள். இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் யாம் அருளை அநுபவப் பொருளாக விளைவிக்கும் கலைகள்

அனைத்தையும் கற்றுக் கொடுக்கும் கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம் எனும் நான்கையும் உருவாக்கியிருக்கிறோம்.

இவற்றால் ஆயிரமாயிரம் இளைய தலைமுறையினர்கள் அருளை அநுபவப் பொருளாக வழங்கி நோய்களுக்கும், பேய்களுக்கும், மற்ற நலிவுகளுக்கும் நலம் விளைவிக்கும் அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும் உலா வருகிறார்கள். இப்படி இவர்கள் செயல்பட்டும் கூட நமது மக்கள் நமது இந்துமதத்தின் அருமைபெருமைகளையும், அரிய பயன்களையும் புரிந்து கொள்ள முடியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

4) நண்ப! நமது மதத் தலைவர்களும், மதத்தின் பெயரால் உள்ள கட்சிகளின் தலைவர்களும் அன்றாடம் முறையாகப் பூசைகளைச் செய்து அருட்சத்தியைப் பெற்று பிறருக்கு மந்திரிக்கவும், சித்திமுத்திகளைத் தரவும் வல்லவர்களாக விளங்க வேண்டும். ஆனால், ஏறத்தாழ எல்லோருமே ஏட்டுச் சுரைக்காய் போலவே இருக்கிறார்கள். இதனால்தான் அரைகுறையான சத்திகளைப் பெற்ற மந்திரவாதிகளும், குறிகாரர்களும், சித்து விளையாடல்காரர்களும் நமது மதத்தின் இருண்டநிலையில் மின்மினிப் பூச்சிகளாகவும், கண்சிமிட்டும் விண்மீன்களாகவும் வாழ்ந்து சென்று விடுகிறார்கள். <u>அதாவது, இந்துமதத்தில் வழிகாட்டுபவர்களாக இருக்கின்றவர்களில் பெரும்பாலானவர்கள் இருளுக்குள் நடப்பவர்களாக மட்டும் இல்லை. தங்களுக்குள் இருளை வைத்துக் கொண்டிருப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.</u>

எனவேதான் யாம், கணக்கற்ற சித்தரடியான்களையும், சித்தரடியாள்களையும், சித்தரடியார்களையும் உருவாக்கி; கல்லையும் புல்லையும் கூட கடவுளாக்கிக் கொடுத்து; கணக்கற்றோர் நாள்,

கோள், மீன், கண்ணேறு பாதிப்புக்களால் தொல்லைப்படுவதையும்; காற்று, கருப்பு, பேய், பிசாசு முதலியவைகளால் தொல்லைப்படுவதையும்; மந்திரவாதிகளின் பில்லி, சூனியம், ஏவல் முதலியவைகளால் தொல்லைப்படுவதையும் தடுக்கும் பணியினைத் துவக்கியிருக்கிறோம். இந்த அருள் மருத்துவமனைகளாகச் செயல்படும் அருட்கோட்டங்களை நூற்றுக்கணக்கில் நாடெங்கும் உருவாக்கி மக்களின் அக இருளையும், புற இருளையும் அகற்றுகிறோம். இந்தத் திட்டம்தான் அருட்பணி விரிவாக்கத் திட்டம். **இதற்குரிய விலையாகத்தான் விவரம் தெரிந்த நாள் முதல் இன்று வரை யாம் எம்மை முழுமையாக உலகியல் கடந்தும், துறந்தும், மறந்தும் அருளுலகப் பயிற்சிகளிலும், முயற்சிகளிலும், தேர்ச்சிகளிலும் செலவிட்டுள்ள எமது வாழ்நாள் இருக்கிறது**.

எமது பதிலிகளில் குறிப்பிடத் தக்கவர்களாக உள்ளவர்கள் மதுரை வட்டாரத்தில் தங்களுக்கு நன்கு அறிமுகமாகி யிருக்கிறார்கள். எனவே, தாங்கள் இந்த அஞ்சலையே நேரில் எடுத்துக் கொண்டு சென்று அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் நெ.சேவுகன், அருள்மிகு சுடலைச் சன்னிதானம் பெரி. முத்தையா, அருள்மிகு தேவி விருதுநகர் மாரியம்மன் சன்னிதானம் பிறமயோகி M.S.R.மாரியப்பன், அருள்மிகு மூலக்கரைச் சுடலைப் பத்திரகாளி சன்னிதானம் N.S.சுவாமிநாதன், V.R.தனஞ்செயன், அருள்மிகு தேவதானப்பட்டி காமாட்சியம்மன் சன்னிதானம் வெ.செகதீசன், ... முதலிய பலரிடமும் படித்துக் காட்டி இதனையே குருவாணையாக அறிவித்து வசதி வாய்ப்பு ஓய்வு உள்ளவர்களை யெல்லாம் வெள்ளிக் கிழமையில் ஒன்று கூட்டி அழைத்துச் சென்று கொண்டு இந்து முன்னணியினரையும், மற்ற அமைப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல் செய்ய முற்படுங்கள்.

**<u>குறிப்பு</u>:-** அன்புகூர்ந்து என்றைக்கும், எந்த நிகழ்ச்சிக்கும் தனிமனிதராக யாரையும் அழைத்துக் கொண்டு செல்ல வேண்டாம். அதாவது நம்மவர்களில் குறைந்தது இரண்டு பேர்களையாவது சேர்த்து அழைத்துக் கொண்டு செல்ல வேண்டும். **<u>அதற்கு இதனையே குருவாணையாக ஏற்கவும்.</u>** இவ்வஞ்சல் காணும் அனைவரும் இதனையே குருவாணையாகக் கொண்டு திரு S.V.நம்மாழ்வார் உடன் சேர்ந்து இந்து முன்னணி கூட்டத்தில் கலந்து கொண்டு ஒத்துழைக்கவும். கலந்துரையாடல் கூட்டத்திற்கு நம்மவர்கள் அனைவரும் சன்னிதான உடையில் செல்ல வேண்டும்.

**அன்பு**
**குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்,**
**5/5/87.**

நகல் நல்கியவர்:-

அருள்மிகு மூலக்கரை சுடலைபத்திரகாளி சன்னிதானம் சித்தரடியான் S.V.நம்மாழ்வார், ஸ்ரீ எலெக்ட்ரானிக்சு, 58, தெற்குவெளி வீதி, மதுரை-625001.

**//உண்மை நகல்//**
**// இதன் மூலநகல்: சித்தரடியான் திரு S.V. நம்மாழ்வார் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

# நாட்டின் இப்போதைய நிலை...

இத் திருநாட்டில் விடுதலைக்குப் பிறகு குறிப்பிட்ட நெடியகால இடைவெளி கிடைத்தும் கூட இன்னும் அறியாமை இருள்; தனிப்பட்டவரின் ஆணவம் நிறைந்த ஆதிக்கம்; மிகப் பெருந்தொகையான மக்களின் அப்பாவித் தன்மை மிக்க அடிமை நிலை; சூழ்ச்சித் திறமுடைய முதலாளி வர்க்கத்தின் சுரண்டல் நிலை; வீழ்ச்சி நிலைகளால் தன் வலிமையுணராது அடங்கிக் கிடக்கும் தொழிலாளி வர்க்கத்தின் சுரண்டப்படும் நிலை; படித்த படிப்புக்கும், வாழ்க்கைக்காக ஏற்கும் பணிகளுக்கும் எள்முனையளவு கூடத் தொடர்பு இல்லாததால் படிப்பின் பெயரால் செலவளித்த பொருளுக்கும், காலத்துக்கும், முயற்சிக்கும் ஈடுதேடித் தவிக்கும் படித்தவரின் பரிதாபநிலை; பட்டங்கள் பல பெற்றும் வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்ளக் கூடப் போதுமான அளவு பொருளீட்ட முடியாத நிலையில் வேலையில்லாமல் திண்டாடித் தவிக்கும் பட்டதாரி மாணவர்களின் வேலையில்லாத் திண்டாட்ட நிலை; ... முதலியவை கொடிய வெறியாட்ட நிலையில் இருந்து வருகின்றன என்பதை எண்ணும் போது இந்த நாட்டுச் சிந்தனையாளர்கள் பொருளாதார நோக்கு, அறிவியல் நோக்கு, சமுதாயச் சமத்துவ நோக்கு, அரசியல் சுதந்திர நோக்கு, ... முதலிய இன்றியமையாத பல நோக்குகளைப் பெற்றுச் சிந்திக்க வில்லை என்றே தெரிகிறது.

அதாவது, இத் திருநாட்டின் அரசியல் தலைவர்களும், சமுதாயத் தலைவர்களும், சமயத் தலைவர்களும், இலக்கியக் கலைஞர்களும் வெறும் புகழ் வெறியர்களாக, பொழுதுபோக்குப் பிரியர்களாக, பொருள் நாட்டமுடையவர்களாக, வாய்ச்சொல் வீரர்களாக, கொள்கைத் தெளிவு இல்லாதவர்களாக, திட்டவட்டமான குறிக்கோள் அற்றவர்களாக ... வாழ்ந்து சென்றிருக்கின்றார்கள் என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

**//குருதேவர் அவர்கள் எழுதிய ‘சிந்திக்கலாமா?’ என்ற நூலில் காணப்படும் சில வரிகள்.//**

## அதர்வான வேதம் காண்டம்: 1, மண்டலம்: 8, நாள்வாக்கிய மலர்கள்: 21 முதல் 48 வரை.

மண்ணுலகு கடந்து இருக்கின்ற ஏழு வெளிகளில் உள்ளவர்களில் இம்மண்ணுலகுக்கு வந்து நேரடியாகச் செயல்பட்டுச் செல்பவர்களும் உண்டு; இங்கேயே நிலையாக தங்கி இருந்து செயல்படுவதும் உண்டு. இப்படிப்பட்ட ஏழு வெளியினர்களையும் எதிர்பாராமல் தெரிந்து, பூசை செய்து, பத்தி சத்தி சித்தி முத்திகளில் தேர்ந்து குடும்ப ஆண்டவர்களாக மாறுகிறவர்களும் உண்டு. எனவேதான், குடும்ப ஆண்டவர்களிலேயே மானுட உடல் அமைப்புக்களிலும், வாழ்வியல்களிலும் மாறுபட்ட அமைப்புக்களையும், பண்புகளையும் உடையவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு பூசை செய்யும் நெறி முறை விதிகள் குறிப்பிட்ட குடும்பத்தவர்களை மட்டும் அன்றி, மற்ற குடும்பத்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவைகளாகவே இருக்கும்.

இதன்படிப் பார்த்தால் இந்துமதத்தைச் சேராதவர்களும், இந்துமதத்தில் நம்பிக்கை இல்லாதவர்களும், பகுத்தறிவு வாதிகள், நாத்திக வாதிகள், சீர்திருத்த வாதிகள் எனப்படுகிறவர்களும், குடும்ப ஆண்டவர்களின் பூசை நெறிமுறைகள் பற்றிக் கேட்கின்ற எந்தக் கேள்விக்கும் அவர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் அல்லது அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் வெளிப்படையாக இந்து வேதப் பேருண்மைகளைக் கூற முடியாது, கூறக் கூடாது.

**// ஆதாரம்: குருதேவர் அருளிய "இந்து வேதம்". //**

**"இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."**

**- குருபாரம்பரிய வாசகம்.**



மெய்ஞ்ஞானக்கொடி





மெய்ஞ்ஞானக்கொடி

**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் (கி.பி.785 - 1040).**

இவருக்கு அடுத்து சுமார் 900 ஆண்டுகள் கழித்து 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://gurudevar.org
https://induism.org https://books.gurudevar.org
Email: indhuism@gmail.com